Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, FEBRUARY 20, 2024

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 20, 2024 | ஒளி: 09 கதிர் 196 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# மூவரும் பலி

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய் மற்றும் மகள்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆராச்சிக்கட்டுவ மற்றும் அனவிலுந்தவ உப நிலையங்களுக்கு இடையில் மோட்டார் சைக்கிள், திங்கட்கிழமை (19) மாலை புகையிரதத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# இராஜாங்க அமைச்சருக்கு எதிராக சவப்பெட்டியுடன் உண்ணாவிரதம்




**கனகராசா சரவணன்**

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு ஆளாகாமல் செங்கலடி பிரதேச செயலாளர் சட்டப்படி தமது கடமையைப் புரியுமாறும், இராஜாங்க அமைச்சரை ஏறாவூர் பற்று பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் பதவியைப் பறிக்குமாறு கோரியும், சவப்பெட்டியுடன் இருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# “ஹரினின் கூற்று பாரதூரமானது”



இலங்கை, இந்தியாவின் ஒரு பகுதி என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்திருப்பது மிகவும் பாரதூரமான அறிக்கை எனவும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் இவ்வாறான அறிக்கையை வெளியிடுவதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2



நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற

# “நாம் தயாராக வேண்டும்”

'பாரத்-லங்கா' வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை

சவால்களை ஒவ்வொன்றாக அரசு முனைப்புடன் எதிர்கொண்டு வருகிறது. தற்போது வடக்கு கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ச்சி P2

# “ஹரினுக்கு மரண தண்டனை விதிக்கவும்”



அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என அறிவித்துள்ளமை இலங்கையின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டை நேரடியாக மீறும் செயலாகும் என உதய கம்மன்பில திங்கட்கிழமை (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அரசியலமைப்பின் படி எடுக்கப்பட்ட சத்தியப் பிரமாணத்தை மீறுவதாகும்.

தொடர்ச்சி P2

# பொன்சேகாவை நீக்க ஐ.ம.சவுக்கு தடை உத்தரவு



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தியில் வகிக்கும் பதவிகள் மற்றும் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தத் தடை விதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் திங்கட்கிழமை (19) உத்தரவு பிறப்பித்துள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவைப் பரிசீலித்த பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த இடைக்காலத் தடை உத்தரவு 14 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கெஹலியவின் சுகயீனத்தை ஆராய்வதற்கு குழு நியமனம்



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் சுகயீனம் தொடர்பில் பரிசோதனை செய்வதற்காக விசேட வைத்தியர்கள் 9 பேரடங்கிய வைத்திய குழுவை நியமிக்குமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்குக் கட்டளையிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியாதளவுக்கு கெஹலிய ரம்புக்வெலவுக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளது தொடர்பில்,

தொடர்ச்சி P2

அதிகரித்த மின்சாரக் கட்டணத்தை ஆராய

# குழுவொன்றை நியமிக்க யோசனை



இலங்கை மின்சார சபை மின்சாரக் கட்டணத்தை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கு மாறாகத் திருத்தியமைப்பது தொடர்பில் ஆராய்வதற்காகப் பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனையை எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழுவொன்று பாராளுமன்றத்தில் கையளித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 17 பேரின கையொப்பத்துடன் கையளிக்கப்பட்டுள்ள குறித்த தீர்மானம், பாராளுமன்றத்தின் சமீபத்திய நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# துப்பாக்கிச் சூட்டில் விவசாயி தப்பினார்: வீதியை மறித்து மக்கள் போராட்டம்

**றொசேரியன் லெம்பட்**



மன்னார்- மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம்-நொச்சிக்குளம் பகுதியில் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை இலக்கு வைத்து திங்கட்கிழமை (19) துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், குறித்த கிராம மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# மன்னாள் சிறுமி படுகொலை: சந்தேக நபருக்கு விளக்கமறியல்

**ரெசேரியன் லெம்பட்**

தலைமன்னார்- ஊர்மனை கிராமத்தில் சிறுமியொருவர் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் திங்கட்கிழமை (19) உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் 10 வயதுடைய சிறுமி ஒருவர் வெள்ளிக்கிழமை 16ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2



கொட்டகெதன இரட்டைக் கொலை

# ‘செயின் கில்லர்’க்கு மரண தண்டனை



இரத்தினபுரி - கொட்டகெதன பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தில் தாயையும் மகளையும் பலாத்காரம் செய்து கொன்ற வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட `செயின் கில்லர்’ என்பவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன திங்கட்கிழமை (19) மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். தொடர்ச்சி P2

நவம்பர் 17க்கு முன்னர்

# புதிய ஜனாதிபதி பதவிப் பிரமாணம்



ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நடத்த வேண்டும் எனவும் நவம்பர் 17ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கமைய, இந்த வருடம் ஜூலை மாத இறுதியில் அல்லது ஒகஸ்ட் மாத தொடக்கத்தில் ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு கடமைப்பட்டிருப்பதாகவும்,

தொடர்ச்சி P2

# சன்னவிற்கு (AAAS) விருது



பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவிற்கு விஞ்ஞான சுதந்திரம் மற்றும் பொறுப்புக்கான விருது (American Association for the Advancement of Science, AAAS) (Scientific Freedom and Responibility Award) அமெரிக்க விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தினால் (AAAS) வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினரின் சவால்களை எதிர்கொண்டு சிறுநீரக நோய் தொடர்பான தனது ஆராய்ச்சியின் மூலம் உலகெங்கிலும் உள்ள மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்த விவசாய சமூகத்தின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு இந்த விருதைப் பெற்றுள்ளார்.

முதலில் விருது அறிவிக்கப்பட்டபோது, வேளாண் இரசாயன நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததால், விருதை மறுபரிசீலனை செய்ய சிறப்பு நடுவர் குழு உத்தரவிட்டது. இறுதியில் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கே விருது வழங்கப்பட வேண்டும் என்றும் நடுவர் குழு முடிவு செய்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இராஜாங்க அமைச்சருக்கு எதிராக...

கல், மண் மற்றும் கிறல் அகழ்வில் சட்டரீதியாக ஈடுபடுபவரும் இருவரே, மட்டு- செங்கலடி பிரதேச செயலகத்துக்கு அருகில், சவப்பெட்டியுடன் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தில், திங்கட்கிழமை (19) குதித்துள்ளனர்.

கல், மண் மற்றும் கிறவல் என்பனவற்றை சட்டரீதியாக அனுமதி பெற்று அகழ்வில் ஈடுபட்டுவருபவர்களின் 2024ஆம் ஆண்டு அனுமதியைப் புதுப்பிக்க இராஜாங்க அமைச்சரின் சிபார்சு இருந்தால் மட்டும் புதுப்பிக்கமுடியும் என பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க மறுத்ததை அடுத்தே, இராஜாங்க அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக உண்ணாவிரத போராட்டத்தில் இருந்துவரும் இருவரும் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்.

“செங்கலடி பிரதேசத்தில் கல், மண் மற்றும் கிறவல் என்பனவற்றுக்கு சட்டரீதியாக அனுமதி பெற்று பலரும் அகழ்வு பணியில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில் 2023 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் அனுமதிப்பத்திரம் காலாவதியானதை அடுத்து 2024ஆம் ஆண்டு அதனைப் புதுப்பிப்பதற்கு, அகழ்வு பணியில் ஈடுபட்டுவருபவர்கள் பிரதேச செயலகத்திற்குச் சென்றால் பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்க இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் சிபார்சு வழங்கினால் மட்டும் அதனைப் புதுப்பித்துத் தரமுடியும் என கூறி புதுப்பிக்க மறுப்பு தெரிவித்து வருகின்றார்” என்றனர்.

இதனையடுத்து, “மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்துப் பல பிரச்சினைகளை முன்வைத்தோம் அவர் அந்த கடிதத்தைப் பிரதேச செயலாளருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், இதுவரை பதில் எதுவும் இல்லை” என்றனர்.

“நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. கல், மண் மற்றும் கிறவல் அகழ்வதற்கு அது சார்ந்த திணைக்களங்கள் பரிசோதனை செய்து அதற்கான அனுமதியை வழங்கி நாங்கள் ஏற்கெனவே அகழ்வு பணியினை மேற்கொண்டுவருகின்றோம்.

ஒவ்வொரு கல்குவாரியிலும் 10க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கின்றனர். இவ்வாறு 300க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்துவருகின்றனர். இவர்களது வாழ்வாதாரமே இதுதான்.

“இராஜாங்க அமைச்சரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்தால்தான் மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றால் இதில் யார் அதிகாரிகள்? அரசியல் ரீதியாகவா அல்லது பேரம் பேசுவதற்கா ? அமைச்சரை சந்திக்க வேண்டும் என கேள்வியெழுப்பிய அவர், இவ்வளவு காலமும் அனுமதிப்பத்திரம் வழங்க அரசியல் இருந்ததே இல்லை. இந்த முறைதான் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிப்பதில் அரசியல் வாதிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் எங்கள் பிரதேசத்தில் அபிவிருத்திக் குழு என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவருக்கு ஏற்றமாதிரி அதிகாரிகளை துஸ்பிரயோம் செய்து வருகின்றார்” என்றனர். “எனவே, இந்த அதிகார துஷ்பிரயோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அரச சேவை, அரச சேவையாக இயங்கவேண்டும் என்பதற்காகத் தீர்வு எட்டும்வரை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம்” என்றனர்.

# “ஹரினின்...

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில், திங்கட்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் இறையாண்மைக்குக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் அந்த அறிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டிப்பதாகவும் அத்தநாயக்க குறிப்பிட்டார்.

இறையாண்மை கொண்ட நாடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இலங்கை இந்தியாவின் அங்கம் என்ற கருத்தை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

# “ஹரினுக்கு...

இதன்படி அமைச்சர் ஹரீன் அமைச்சர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர். மறுபுறம், நமது நாட்டை வேறொரு நாட்டுடன் இணைப்பது தேசத்துரோகச் செயலாகும். தேசத்துரோகம் என்பது ஒரு அரசனுக்குத் துரோகம் செய்வதல்ல.

நமது தண்டனைச் சட்டத்தில் தேசத் துரோகத்திற்கான தண்டனை மரணம். எளிமையாகச் சொன்னால், அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மரண தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்தைச் செய்துள்ளார். என்றும் அவர் தெரிவித்தார்.

# “நாம் தயாராக...

அதேசமயம், மலையகப் பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் கவலைகளை நிவர்த்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு நாம் தயாராக வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேட்டுக்கொண்டார்.

மலையக தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய ஜனாதிபதி, எதிர்வரும் மாதத்திற்குள் மலையக அரசியல் பிரதிநிதிகளைக் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைத்துக் கூட்டுப் பிரேரணைகளை முன்வைக்கும் நோக்கத்தை வெளிப்படுத்தினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக 10,000 வீடுகளை நிர்மாணிப்பதை இலக்காகக் கொண்ட இந்திய வீடமைப்புத் திட்டத்தின் 4 ஆவது கட்டமான ‘பாரத்-லங்கா’வின் மெய்நிகர் தொடக்கம் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (19) இடம்பெற்றது. .

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பத்து மாவட்டங்களில் உள்ள 45 தோட்டத் தோட்டங்களில் 1,300 வீடுகளுக்கு மெய்நிகர் ஊடாக அடிக்கல் நாட்டினர்.

குறிப்பாக மலையக தமிழ்ச் சமூகம் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், இந்திய அரசாங்கத்தின் ஆதரவுக்கு ஜனாதிபதி விக்ரமசிங்க நன்றி தெரிவித்தார். வீட்டுக் கட்டுமானத்திற்காகத் தோட்ட நிறுவனங்களிடம் இருந்து காணி சுவீகரிப்புக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை அவர் எடுத்துக்காட்டியதுடன், மலையகத்தில் கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு, வீடமைப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை எடுத்துரைத்தனர்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில்;

‘மலையகத் தமிழ்ச் சமூகம் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்திய அரசாங்கம் இந்த வீட்டுத் திட்டத்திற்குத் தாராளமாக ஆதரவளித்துள்ளது. இந்தச் செயலுக்காக இந்திய அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ்ச் சமூகம், நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கியது, துரதிர்ஷ்டவசமாக நிலம் மற்றும் வீட்டு உரிமை இல்லாததால் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது.

இன்று அவர்களது அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட போதிலும் அவர்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டியது அவசியமாகும். இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்குத் தோட்ட நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தையில் ஆரம்பித்து அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக ஆரம்பித்துள்ளது. இதன் விளைவாக, எதிர்காலத்தில் தொடர்புடைய வீட்டுத் திட்டங்களைத் தொடங்குவோம் என்று எதிர்பார்க்கிறோம்.

மேலும், தோட்டத் துறையில் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. தோட்டங்களுக்குள் உள்ள கல்வி நிலைகள் மற்ற பிராந்தியங்களில் உள்ளதை விடப் பின்தங்கியுள்ளது, அனைத்து பள்ளிகளிலும் சமமான கல்வி தரங்களை நிறுவ வேண்டிய அவசியம் உள்ளது.

மேலும், மலையகத்தில் வசிப்பவர்கள் அனைவரும் தோட்ட வேலைகளில் ஈடுபடுவதில்லை என்பதை அங்கீகரிப்பது அவசியமாகும். எனவே, கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான அணுகல் உட்பட இளைஞர்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதற்கான முயற்சிகள் நீட்டிக்கப்பட வேண்டும், குறிப்பாக சர்வதேச வேலை வாய்ப்புகளை நோக்கமாகக் கொண்டது.

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நிலைக்குத் தனிநபர்களை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு, தோட்ட ஒப்பந்தத்தின்படி, தொடர்ச்சியான தோட்டத் தொழிலாளர் அல்லது காணிகளை வழங்குதல் ஆகியவற்றுக்கு இடையேயான முடிவு தற்போது ஆலோசிக்கப்படுகிறது. இந்த முயற்சியானது மலையக சமூகங்களுக்கிடையில் பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமத்துவத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அடுத்த மாதத்திற்குள் அனைத்து அரசியல் பிரதிநிதிகளையும் கூட்டி கட்சி பிளவுகள் அற்ற ஒருங்கிணைந்த பிரேரணைகளை முன்வைப்பதே எமது நோக்கமாகும் என்றார்.

# பொன்சேகாவை...

இந்த மனுவின் பிரதிவாதிகளாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பொருளாளர் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# கெஹலியவின்...

பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, நகர்த்தல் மனுவின் ஊடாக விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல்லவின் மருத்துவ நிலைமைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் நிபுணர் குழுவில் இதய நோய்கள், எலும்பு நோய்கள் மற்றும் நுரையீரல் நோய்களில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களை உள்ளடக்குமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ரம்புக்வெல்லவின் உடல் நிலை தொடர்பிலான விசாரணைகள் அடங்கிய அறிக்கையை எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் நீதிமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு நீதவான் உத்தரவிட்டார்.

நரம்பியல் நோயாளர்களுக்குப் பயன்படுத்தப்படும் ‘இம்யூனோகுளோபின்’ என்ற தரமற்ற ஆன்டிபாடி தடுப்பூசிகளை இந்தியக் கடன் திட்டத்தின் கீழ், இறக்குமதி செய்து, போலி ஆவணம் தயாரித்து அரசு மருத்துவமனைகளுக்கு விநியோகித்துப் பல கோடி ரூபாய் மோசடி செய்து நோயாளிகளின் உயிரைப் பாதுகாப்பற்றதாக மாற்றியமை தொடர்பான இரகசியப் பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, 08ஆம் திகதி கைது செய்யப்பட்டு, கடந்த 15ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அன்றையதினம் (15ஆம் திகதி) அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், 15ஆம் திகதிக்கும் 22ஆம் திகதிக்கும் இடையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட முடியாது எனவும் சிறைச்சாலை வைத்தியசாலை வைத்தியரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, கெஹலிய ரம்புக்வெல்ல இல்லாமலேயே வழக்கு விசாரணை நடத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, சுகயீனம் காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர். கபில விக்ரமநாயக்க அம்பியூலன்ஸ் வண்டியில் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு மார்பின் இடது பக்கத்தில் வலி இருப்பதாகவும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்தியர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கெஹலியவுக்கு சிகிச்சையளித்த சிங்கப்பூர் வைத்தியசாலையின் இரு வைத்தியர்கள் வழங்கிய வைத்தியப் பரிந்துரைகளின் பிரதிகள். நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

கெஹலிய சிறைச்சாலை வைத்தியசாலையிலோ அல்லது தேசிய வைத்தியசாலையிலோ சிகிச்சை பெற முடியுமா? கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை சிகிச்சை அளித்துவிட்டு, 15ஆம் திகதி, நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத அளவுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததா? என்பது குறித்து அறிவியல்பூர்வமான காரணங்களைத் தெரிவிக்க நிபுணர் மருத்துவக் குழுவை நியமிக்க உத்தரவிட வேண்டுமென, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்திடம் கோரிநின்றார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த நீதவான், முறைப்பாட்டின் கோரிக்கைகளை அனுமதித்து உரிய உத்தரவுகளைப் பிறப்பித்ததோடு, அது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டார்.

# துப்பாக்கிச் சூட்டில்...

நொச்சி குளத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது கிராமத்தில் வயலில் திங்கட்கிழமை (19) நீர் பாய்ச்சிக் கொண்டு இருந்த வேளையில், ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் ரி-56 ரக துப்பாக்கி மூலம் விவசாயி மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டிருந்த நிலையில் அவருக்கு எந்த வித பாதிப்புக்களும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில காலமாகக் கிராமத்து மக்களின் மீது ஒரு குழுவினர் முன்னெடுத்த தாக்குதலில் மூவர் உயிரிழந்துள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிராமத்துக்கு பொலிஸ் காவல் போடப்பட்டும் அதையும் மீறி சம்பவம் தொடர்வதாகவும், திங்கட்கிழமை (19) நடைபெற்ற சம்பவத்தைக் கண்டித்தும் நொச்சிக்குளம் கிராம மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பதாதைகளில் ‘கொலை காரர்களுக்கு ஆயுதம் கொடுத்தது யார்?’ ‘எங்களைப் பாதுகாப்பது அரசின் கடமை’ ‘எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு தாருங்கள்’ எங்கள் மக்களுக்கு நீதி இல்லையா? யார் தருவது’ போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் உடன் சட்டத்தின் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து திங்கட்கிழமை (19) காலை முதல் மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகருக்கு வருகை தரும் அனைத்து வாகனங்களும், பொலிஸாரினால் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குழுவொன்றை...

இதற்கமைய, இலங்கை மின்சார சபையினால் அறவிடப்படும் கட்டணங்களின் சட்டப்பூர்வமான தன்மை மற்றும் நியாயத்தன்மையை ஆராய்ந்து, உயர் நீதிமன்றத் தீர்ப்பைக் கருத்தில் கொண்டு, கீழ்நிலை நுகர்வோரைக் கருத்தில் கொண்டு, ஏதேனும் ஒரு வகையில் சட்டவிரோதமானது என கண்டறியப்பட்டால், பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தல். உள்நாட்டு மத மற்றும் தொண்டு வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் கட்டண அமைப்பு உட்பட அவசரகால தீர்வுகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க இந்த சிறப்புக் குழுவும் நியமிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாள்...

அதே கிராமத்திலுள்ள தென்னை தோட்டத்தில் வேலை செய்யும் திருகோணமலை குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேக நபர், நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது இந்நிலையில், குறித்த சந்தேக நபரைத் திங்கட்கிழமை (19) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள், உயிரிழந்த சிறுமி சார்பில் மன்றில் முன்னிலையாகினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

# புதிய ஜனாதிபதி...

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படாவிட்டால், நவம்பர் 18 ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்கம் சட்டத்தைப் பின்பற்றாது என்றார்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு திட்டமிடப்பட்ட தினங்களுக்குள் நடத்த வேண்டும் எனவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இல்லாதொழிக்க பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எடுக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு இன்னும் ஒரு வருடத்திற்கு இந்த அரசாங்கம் நீடிக்குமா என்ற கேள்வியைப் பொதுமக்களிடம் நேரடியாகக் கேட்கப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து அறிவிக்கத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே சட்டப்பூர்வ அதிகாரம் உள்ளது, ஜனாதிபதி செயலகம் அல்ல என்றும் தெரிவித்த அவர், வாக்கெடுப்பு முடிவுகளைச் சவால் செய்ய எந்தவொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்றார்.

ஜனாதிபதி பதவியை நீக்குவது என்பது இலகுவான செயலல்ல, அது அரசியலமைப்புடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள ஒன்றாகும், நாட்டின் அடிப்படை அரசியலமைப்பைத் திருத்துவதற்கு முன்னர், மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் பாராளுமன்றம் கொண்ட அரசாங்கம் இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு தான் ஆதரவளிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சன்னவிற்கு...

கோவிட் தொற்றுநோய் காரணமாக விருது வழங்குவதில் தாமதம் ஏற்பட்டநிலையில், அமெரிக்காவின் கொலராடோ, டென்வர் நகரில் நடைபெற்ற அறிவியல் முன்னேற்றத்திற்கான அமெரிக்கச் சங்கத்தின் வருடாந்திர மாநாட்டில், அதன் நிகழ்ச்சி இயக்குநர் தெரசா ஹாரிஸ், விருதை வழங்கி வைத்தார்.

இதற்கமைய, கலிபோர்னியா மாநில பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சரத் குணதிலக்க, சன்ன ஜயசுமனவுடன் இணைந்து ஆராய்ச்சியை மேற்கொண்டார், அறிவியல் சுதந்திரம் மற்றும் பொறுப்புக்கான அறிவியல் சர்வதேச விருதின் 2019 அமெரிக்கச் சங்கத்தின் ஒரு பகுதியாகவும் இவர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ‘செயின் கில்லர்’க்கு மரண தண்டனை

இந்த இரட்டை படுகொலை தொடர்பிலான குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி, 147 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை, சுமார் 2 மணிநேரம் வாசித்தார். நீதிமன்ற அறையில் ஒளிர்ந்துகொண்டிருந்த விளக்குகளை அணைத்து, மின்விசிறிகளை நிறுத்திவைத்து, மரண தண்டனை தீர்ப்பு எழுதப்பட்டிருந்த கடதாசியில் ஒப்பமிட்டு, அந்தப் பேனாவை உடைத்து வீசியெறிந்துவிட்டு எழுந்து சென்றார்.

ஜனாதிபதி நியமிக்கும் ஒரு நாளில், ஒரு நேரத்தில், வெலிக்கடை சிறைச்சாலையில், குற்றவாளியின் உயிர், உடலில் இருந்து பிரியும் வரையிலும் கழுத்தில் சுருக்கிட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்படவேண்டும்.

# பாரத்-லங்கா வீட்டுத்திட்டம் ஆரம்பம்

கௌசல்யா சுரேஷ்

இந்திய அரசின் நிதி உதவியுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலுடன் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஒருங்கிணைப்பின் கீழ் மலையகத்துக்கான 10 ஆயிரம் பாரத் லங்கா எனும் வீட்டுத் திட்டம் திங்கட்கிழமை (19) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 1,300 வீடுகளுக்கு ஒரே தடவையில் நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பணம் இடம்பெற்றுள்ளதுடன், இதன் பணிகளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கேகாலை, குருணாகல், இரத்தினபுரி, காலி, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 45 தோட்டங்களில் நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பண விழா



நடைபெற்றுள்ளது.

பொகவந்தலாவ கீழ்பிரிவு தோட்டபகுதியில் 50 வீடுகளுக்கான அடிகல் நாட்டும் நிகழ்வு, நோர்வூட் பிரதேச சபையின் முன்னால் தலைவர் ரவிகுழந்தைவேல் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் நோர்வூட் பிரதேச சபையின் முன்னால் உறுப்பினர் பிரபு தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரி மனிதவள பெருந்தோட்ட அபிவிருத்தி நிலையத்தின் அதிகாரி பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வு பொறுப்பதிகாரி கடமையேற்பு

வ.சக்தி



கிழக்கு மாகாண புனர்வாழ்வு பொறுப்பதிகாரியாக லெப்டினன் கேர்ணல் சனத் அபேதிலக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு அலுவலகத்தில் வைத்து திங்கட்கிழமை (19) கடமையை பொறுப்பேற்றுள்ளார் .

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கி சமூகத்துடன் இணைப்பாக்கம் செய்வதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்டத்தில் போதைப்பொருள் முற்தடுப்பு விழிப்புணர்வு செயற்பாடுகளை இப்புனர்வாழ்வு நிலையமானது முன்னெடுத்து வருகின்றது.

முன்னாள் பொறுப்பதிகாரி லெப்டினன் கேர்ணல் சன்டிக்க எகலப்போல மாவட்ட செயலகத்துடன் இணைந்து போதைப்பொருள் முற்தடுப்பு நிகழ்ச்சி திட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து

## 40,000 மெட்ரிக் தொன் டீசல் மானியம்



இலங்கையின் சுகாதார அமைப்புக்குள் போக்குவரத்து சேவைகளை வலுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜப்பானிய அரசாங்கத்திடம் இருந்து 40,000 மெட்ரிக் தொன் டீசலை இலங்கை மானியமாகப் பெற்றுள்ளது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோர் முன்னிலையில் முறையான கையளிப்பு நிகழ்வு கொழும்பு துறைமுகத்தில் இன்று (19) பெற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், டீசல் வளங்களின் வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக, அதிகாரிகள் அதிநவீன எரிபொருள் மேலாண்மை தகவல் அமைப்பை (FIMS) அறிமுகப்படுத்தியுள்ளனர்.



போதைப்பொருள் கொடுத்து

## உயிரை பறித்த நண்பன்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம்-தெல்லிப்பளை பகுதியில் இளைஞன் ஒருவரால் தனது நண்பருக்குப் போதைப்பொருள் கொடுக்கப்பட்டதால் குறித்த நண்பர் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (19) பதிவாகியுள்ளது.

உயிரிழந்த இளைஞன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நிலையில், கடந்த 06 மாத கால பகுதிக்கு முன்னர், அவற்றில் இருந்து மீண்டு, வேலைக்குச் சென்று வந்துள்ளார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நண்பனின் அழைப்பின் பேரில் வீட்டுக்கு அருகிலுள்ள இடத்திற்கு சென்றவேளை போதைப்பொருளை இளைஞனுக்குக் கொடுத்துள்ளனர். நீண்ட காலமாக போதைப்பொருள் பாவனையில் இருந்து மீண்ட நிலையில், மீண்டும் போதைப்பொருளை பாவித்தமையால், அதீத போதை காரணமாக இளைஞனின் உடல் நிலை மோசமாகியுள்ளது.

இதனையடுத்து, இளைஞனுடன் போதைப்பொருளை நுகர்ந்த மற்றைய இளைஞன் அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட இளைஞன் தாயாருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட, தனது உடல்நிலை மோசமாக உள்ளதாகவும், நெஞ்சு வலிப்பதாகவும் கூறியுள்ளார்.

இளைஞன் கூறிய இடத்திற்கு தயார் சென்றவேளை, அவர் மயங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை, இளைஞன் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த காங்கேசன்துறை பொலிஸார், இளைஞனை அழைத்து போதைப்பொருளை கொடுத்த, மற்றைய இளைஞனை கைது செய்து, மருத்துவ பரிசோதனைக்காக சட்ட வைத்திய அதிகாரி முன் முன்னிலைப்படுத்தினர். இளைஞன் போதைப்பொருள் பாவித்தமை வைத்திய அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## பாடசாலைகளுக்கு smart board வழங்கி வைப்பு

பாடசாலை மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 55 பாடசாலைகளுக்கு smart board வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

Brandix ஆடைத் தொழிற்சாலையின் ஒத்துழைப்புடன் கிராமப்புற பாடசாலைகளுக்கு smart board வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய மாணவர்கள் அனுமதிக்கான நிகழ்வு

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம்-தெற்கு கல்வி கோட்டத்துக்குட்பட்ட கொத்தான்தீவு முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் ஆறாம் தரத்துக்கு புதிய மாணவர்கள் அனுமதிக்கான நிகழ்வு திங்கட்கிழமை (19) மிக விமரிசையாக நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் கே.டீ.ஹாரூன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றுள்ளதுடன், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர்,



பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், புதிதாக இணைந்த ஆறாம் தர மாணவர்கள் மலர் செண்டுகள் வழங்கி வரவேற்கப்பட்டுள்ளதுடன், குறித்த மாணவர்களுக்கான வகுப்பறை கட்டட தொகுதியையும் அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருள் கொள்வனவுக்கு

## பணம் கிடைக்காததால் உயிர் மாய்ப்பு

எம்.றொசாந்த்

போதைப்பொருள் கொள்வனவு செய்யப் பணம் கிடைக்காமையால் குடும்பஸ்தர் ஒருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் வாங்குவதற்காகத் தனது சகோதரி மற்றும் தாயாரிடம் பணம் கேட்டு, வீட்டில் குழப்பத்தில் ஈடுபட்ட குடும்பஸ்தருக்கு , வீட்டார் பணம் கொடுக்காததால், இவ்வாறு தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அவர், 05 வயது பிள்ளையின் தந்தை எனவும் அதீத போதைப்பொருள் பாவனையால், குடும்ப வன்முறைகளிலும் ஈடுபட்டு வந்ததால், அவரது மனைவி மற்றும் பிள்ளை அவரை விட்டு பிரிந்து வாழ்வதாகவும் தெரிய வந்துள்ளது.

## கசிப்புடன் ஒருவர் கைது



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள முனைக்காடு களப்பு பகுதியில் திங்கட்கிழமை (19) கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை முற்றுகையிடப் பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்கிருந்து 150 கசிப்பு போத்தல், 3 , 50,000 மில்லி லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள், மோட்டர் சைக்கிள், பெரல்கள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில்



ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஏறியவர் பலி: ஏற்றியவரும் உதவியாளரும் காயம்

கௌசல்யா சுரேஷ்

நுவரெலியா-நானுஓயா, டெஸ்போட் மேற்பிரிவிலுள்ள காட்டுப்பகுதியில் இருந்து வெட்டிய மரங்களை ஏற்றிக்கொண்டு பயணித்த லொறியொன்று, வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் விழுந்து ஞாயிற்றுக்கிழமை (18) விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், நானுஓயா நகருக்குச் செல்வதற்காக, லொறியில் பயணித்த டெஸ்போட் தோட்டம் வாழைமலையைச் சேர்ந்த 58 வயதுடைய வடமலை மயில்வாகனம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதி ஆபத்தான நிலையிலும், உதவியாளர் சிறு காயங்களுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக லொறி வீதியில் இருந்து விலகி, விபத்துக்குள்ளாகியுள்ளதாக, பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பஞ்சு மிட்டாய் குறித்து கவனம் செலுத்துவது அவசியம்

நமது நாட்டை பொறுத்தவரையில், தொற்று நோய்களுக்கு அப்பால் தொற்றா நோய்களால் மரணிப்போரின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. உணவு, உடல் பயிற்சி இன்மை, மன அழுத்தம், வேலை வாய்ப்பின்மை, போதியளவான சம்பளம் இன்மை, செலவு அதிகம் உள்ளிட்ட இன்னோரான காரணங்களால் தொற்றா நோய்களுக்குப் பலரும் உள்ளாகின்றனர்.

சதா காலமும் பிரச்சினை, பிரச்சினை என கூறிக்கொண்டே இருப்பவர்கள், பிரச்சினைகளுக்கான காரணங்களை தேடியறிந்து தீர்வு காண்பதற்கு முயற்சிப்பதே இல்லை. இதனாலும், தொற்றா நோய்களுக்கு உள்ளாகி விடுகின்றனர். அவ்வப்போது தொற்றும் புதிய, புதிய நோய்களும் மனிதர்களை வாட்டி வதைத்துவிடுகின்றது.

சுகாதார சேவைக்குப் பெருந்தொகையில் பணத்தை ஒதுக்கினாலும், சில நோய்களுக்கு நிரந்தரமான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாது திணறுகின்றது. இதற்கு சுகாதார சேவையில் தேசிய கொள்கை இன்மையே பிரதான காரணமாகிவிடுகின்றது. ஆட்சிக்கு வரும் தரப்பினர், சில வேலைத்திட்டங்களுக்குத் தேசிய கொள்கையைத் தயாரிப்பது அவசியம்.

இரசாயன உரப் பாவனையால், சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. எனினும், ஒரே தடவையில் இரசாயன உரத்தை தடைசெய்தமையால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு, இந்த உர தடையும் முக்கிய காரணமாய் அமைந்திருந்தது.

இந்நிலையில், புற்றுநோயை உண்டாக்கும் வேதிப்பொருளைக் கொண்ட, பண்டங்களை விற்பனைச் செய்தல் அதிகரித்துள்ளமை, அவ்வப்போது கண்டறியப்பட்டுள்ளது. பொது இடங்களில் பஞ்சு மிட்டாய் விற்பனைச் செய்வதை அவதானித்து இருப்போம். பெரும்பாலும் சிறுவர்களை இலக்கு வைத்தே இம்மாதிரியான தின்பண்டங்கள் விற்பனைச் செய்யப்படுகின்றன.

பஞ்சு மிட்டாயில் வேதிப்பொருள் இருப்பது உறுதியானதை அடுத்து, அதனை விற்பனைச் செய்வதற்குத் தமிழக அரசு தடைவிதித்துள்ளது. 'ரோடமின் பி' எனும் உடலுக்கு கேடு தரும் இரசாயனம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரசாயனம் உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடியது என்றும் தொழிற்சாலைகளில் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டியது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் அவ்வப்போது சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய இரசாயனம் அடங்கிய பதார்த்தங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இன்னும் சில பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இந்த சுற்றிவளைப்புகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும்.

உள்ளூர் சந்தையில் பொருள் ஒன்றின் விலை அதிகரிக்கப்பட்டு தட்டுப்பாடு ஏற்படுமாயின், அதேபோன்றதொரு பொருள் குறைந்த விலையில் விற்பனைச் செய்யப்படும். அப்பொருளுக்கான கேள்வியும் அதிகரித்து இருக்கும் என்பதே எமது அவதானிப்பாகும். இவ்வாறான தருணங்களிலேயே உடலுக்கு ஒவ்வாத, நீண்டநாள் நோய்களை உருவாகக்கூடிய வேதிப்பொருள்களைச் சேர்த்து, உணவுப்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

சுகாதார அமைச்சு, உள்நாட்டுக்குள் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் எவ்வாறான தொற்றுநோய்கள் பரவுகின்றன. தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்வாறான நடைமுறைகள் கையாளப்படுகின்றன. தொற்றா நோய்களை உருவாக்கும் வகையில், எந்தவகையான பொருட்கள் கலக்கப்படுகின்றன என்பது தொடர்பில் அவதானமாக இருப்பதே சிறந்தது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. யாருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்தபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மன்னிப்பு கோருவது பிராயச்சித்தமாகுமா?

மொஹமட் பாதுஷா

முஸ்லிம் சமூகத்தின் மனதை புண்படுத்தும் விதத்தில் 2016ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் தான் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் அச்சமூகத்திடம் மன்னிப்புக் கோருவதாக கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். நீதிமன்றக் கூண்டில் இருந்தவாறு இந்த மன்னிப்புக் கோரிக்கையை அவர் முன்வைத்திருக்கின்றார்.

முதலாவது விடயம் மன்னிப்பு கேட்பது என்பது நல்ல ஒரு பண்பாகும். மன்னிப்பு வழங்குவது அதைவிட உயரிய மனித விழுமியமாகும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை. அந்த வகையில், காலம் கடந்தாவது ஞானசாரருக்கு ஞானம் பிறந்திருக்கின்றதென்றால் அது பாராட்டப்பட வேண்டியதே ஆகும்.

ஆனால், ஞானசார தேரர் உண்மையில் மனம் திருந்தி, மனம் வருந்தி இந்த மன்னிப்பைக் கோரியுள்ளார். அத்துடன், ஒரு சம்பவத்திற்கு மட்டும் அவர் மன்னிப்புக் கேட்டால் போதுமா என்ற கேள்விகள் தவிர்க்க முடியாமல் மேலெழுகின்றன.

பொது பலசேனா என்ற பகிரங்கமான இனவாத அமைப்பின் செயலாளராக இருந்து, இலங்கையில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னரான இனவாத கருத்தியல் மற்றும் நடவடிக்கைகளைத் தூண்டி விட்டவராகப் பரவலாக அடையாளப்படுத்தப்படுபவர்தான் இந்தத் தேரர் என்பதை மக்கள் அறிவார்கள்.

இப்போது நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருகின்றது. அந்த வழக்கில் கடுமையான தீர்ப்பொன்று வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே ஞானசார தேரர் மேற்படி மன்னிப்புக் கோரிக்கையை விடுத்திருக்கின்றார் என்பது கவனிப்பிற்குரியது.

ஆகவே, உளமாற தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டாரா அல்லது நீதிமன்றின் பிடியை தளர்த்துவதற்காக அப்படிக் கேட்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டாரா என்பது தெரியவில்லை. அப்படியென்றால் கூட 8 வருடங்களுக்குப் பின்னரே இந்த ஞானம் பிறந்திருக்கின்றது.

ஞானசார தேரர் உள்ளிட்ட சில பௌத்த துறவிகளும் இனவாத அமைப்புக்களும் 2012ஆம் ஆண்டில் இருந்து 2020ஆம் ஆண்டுவரை ஆடாத ஆட்டமெல்லாம் ஆடின. யுத்த வெற்றியின் மூலம் தமிழர்கள் அடக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில், முஸ்லிம்களையும் நசுக்கி தமக்கு வேண்டியதைச் சாதிப்பதே இனவாதிகளதும், ஆட்சியாளர்களதும் நோக்கமாக இருந்தது.

இந்தக் காலப்பகுதியில் நிறைய இனவாத, மதவாத அடக்குமுறைகள் இடம்பெற்றன. அளுத்கம, பேருவளை கலவரங்கள் இடம்பெற்றன. கண்டி, திகண என மத்திய மாகாணத்தின் மையப் புள்ளியில் முஸ்லிம்களின் சொத்துக்கள்ருபவ்

பள்ளிவாசல்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன ஒரு உயிர் பலியெடுக்கப்பட்டது. அம்பாறை கலவரம் தூண்டிவிடப்பட்டது, தம்புள்ளையில் மட்டுமன்றி, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலங்கள் தாக்கப்பட்டன.

2019ஆம் ஆண்டு ஏப்ரலில் வடமேல் மாகாணத்தில் பழிவாங்கும் நோக்கிலான கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதற்குப் புறம்பாக முஸ்லிம்களின் மீதான நம்பிக்கை, மதிப்பு திட்டமிட்டுச் சீர்குலைக்கப்பட்டது. மிகத் தெளிவாகச் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒரு பெரிய இன முரண்பாட்டை இனவாதிகளும் கடும்போக்கு துறவிகளும் களத்தில் நின்று செய்தனர். ஆட்சியதிகாரம் அதற்குச் சாமரம் வீசியது.

குறிப்பாக, கருத்தடை மாத்திரை, கருத்தடை கொத்து, கருத்தடை ஆடைகள் எனத் தொடங்கி ஒரு குறிப்பிட்ட முஸ்லிம் வைத்தியர் 'ஆயிரம் சிங்களப் பெண்களுக்குக் கருத்தடை செய்தார்' என்பது வரை பல கட்டுக்கதைகளைப் புனைந்து வெளியிட்டவர்கள் இன்னும் இருக்கின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால், முஸ்லிம்கள் மீதான இந்த ஒடுக்குமுறை எல்லாவற்றையும் நியாயப்படுத்துவது போலவும், முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் என்ற பிம்பத்தை காட்டுவது போலவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலையும் பின்னாலிருந்து செய்வித்து, தமக்கு வேண்டியதை ஒரு தரப்பு சாதித்துக் கொண்டது எனலாம்.

இதன் விளைவாக முஸ்லிம்கள் இழந்தது கொஞ்சநஞ்சமல்ல. முஸ்லிம் சமூகம் வெளியில் வருவதற்கும் பயணம் செய்வதற்கும் பயப்பட்டது. பள்ளிவாசல்களில் தொழுவதும் அடிப்படை மனித உரிமையைப் பேணுவதும் கூட பெரிய சவாலாக இருந்தது.

எந்தளவுக்கு என்றால், ஏற்கெனவே முஸ்லிம்களுக்கு எதிரான கருத்தியல்கள் கட்டமைக்கப்பட்டு, சஹ்ரான் கும்பல் மிகப் பெரிய பயங்கரவாதத் தாக்குதலையும் நடத்தியிருந்த காரணத்தினால், கொவிட் தொற்றுக்குள்ளான ஜனாஸாக்களை கூட நல்லடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

விஞ்ஞான பூர்வமற்ற கதைகளைக் கூறி, சிங்கள மக்களை அச்சமூட்டி பிணத்தின் மீதும் ராஜபக்ஷ ஆட்சியும் துறைசார்ந்தவர்களும் ஒரு அரசியலை, இனவாதத்தைச் செய்தனர். கடைசியில் அதுவும் தோற்றுப் போனது. எல்லாம் ஆட்சியதிகாரத்திற்கான 'விளையாட்டு' என்பதை மக்கள் குறிப்பாகச் சிங்கள மக்கள் சற்று காலம் தாழ்த்தி புரிந்து கொண்டனர்.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் இழப்புக்களும் வடுக்களும் மாறவில்லை. நடந்த சம்பவங்கள், நெருக்கடிகள் எல்லாவற்றையும் மன்னித்தாலும் அவை காலத்தால் மறந்து போகக் கூடியவை அல்ல. இனவாத நெருக்கடிகளுக்குப் பிராயச்சித்தம் தேடப்படவில்லை.

கலபொட அத்தேஞானசார தேரர் இப்போதாவது மன்னிப்பு கோரியிருக்கின்றார் என்பதை முஸ்லிம்கள் வரவேற்க வேண்டும். ஏனெனில், பொதுவாக ஞானசாரர் உட்பட இனவாத அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் மற்றும் கடும்போக்கு தேரர்கள் பெரிதாக அரசியலுக்கோ நேரடி ஆட்சி அதிகாரத்திற்கோ வரவில்லை.

அவர்கள் வேறு யாருக்காகவோ, மறைமுக நோக்கங்களை நகர்த்துவதற்காக இதனைச் செய்கின்றார்கள் என்பதே அப்போதிலிருந்து கூறப்பட்டு வருகின்ற விடயமாகும். ஏனெனில், அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுச்சி பெறுவதும் பிறகு அடக்கி வாசிப்பதும் சாதாரணமாக நடைபெறுகின்ற சம்பவங்கள் என கருத முடியாது.

ஆனால், 2016ஆம் ஆண்டில் மட்டுமன்றி, அதற்கு முன்னரும் பின்னரும் ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்தியல் பீரங்கியாகப் பல விடயங்களைக் கூறியிருக்கின்றார். அவர் போன்ற பல பௌத்த துறவிகள், பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இனவாதிகள் நேரடியாகக் களத்தில் நின்றிருக்கின்றார்கள். திரைக்குப் பின்னால் மறை கரங்கள் இயங்கியிருக்கின்றன.

ஆகவே, இங்கே ஞானசார தேரர் மட்டுமே குற்றஞ்சாட்டப்படுபவரும் அல்ல. 2016இல் மட்டும் சம்பவங்கள் இடம்பெறவும் இல்லை என்பதை விளங்க வேண்டும்.

இருப்பினும். இப்படியான எத்தனை இனவாதிகள், கடும்போக்கு துறவிகளுக்கு எதிராகச் சரியான தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? இனவாதிகளுக்கு ஒத்து ஊதிய அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

அல்லது இந்த அடக்குமுறைகளை எல்லாம் பக்கச்சார்பாகப் பார்த்துக் கொண்டிருந்த அரச இயந்திரம் அதற்காகப் பிராயச்சித்தம் தேடியதா என அடுக்கடுக்காக கேள்விகள் எழுகின்றன.

ஞானசாரர் இன்று நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரியுள்ளமை சிங்கள மக்களுக்கு சில புரிதல்களை ஏற்படுத்தும். இனவாதிகளுக்கு ஒரு பாடமாகக் கூட அமையலாம். அவர் இனிவரும் காலங்களில் அடக்கி வாசிக்க முற்படலாம். இப்படிப் பல சாதகமான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆனால், இலங்கையில் அவர் கூறிய ஏனைய இனவாத கருத்துக்கள் தொடர்பான அவரது நிலைப்பாடு என்ன?

அத்துடன், இலங்கையில் யுத்தம் முடிந்த பிறகு நடந்தேறிய இனவாத ஒடுக்குமுறைகளில் பங்கேற்ற ஏனைய இனவாதிகள், கடும்போக்கு துறவிகள், துணைநின்ற அதிகாரிகள் மற்றும் ஆசீர்வாதம் வழங்கிய அரசியல்

தரப்புக்களுக்கு இன்னும் ஞானம் பிறந்ததாகவோ மன்னிப்பு கோரியதாகவோ தெரியவில்லை.

இலங்கையில் தேவைக்கேற்ப அவ்வப்போது கையிலெடுக்கப்படும் உறை நிலை இனவாதம் இன்னும் முற்றாகத் திருந்தவில்லை என்ற யதார்த்தத்தையே இது உணர்த்தி நிற்கின்றது.

## கடிதங்கள்

### பேருந்து சேவைகள் வேண்டும்



முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை நேரங்களில் பேருந்து சேவைகள் இல்லாததன் காரணமாக பாடசாலை மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு திருமுறிகண்டி, பனிக்கன்குளம், கிழவன்குளம், அம்பகாமம் ஆகிய பல பகுதிகளில் இருந்து மாணவர்கள் பாடசாலைக்கு சென்று வருவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.

இதேபோன்று, தேவிபுரம் கிராமத்தில் இருந்து உடையார்கட்டு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லுரி ஆகிய பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்று வருவதிலும் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது.

மேலும், தண்ணிமுறிப்பு-ஆறுமுகத்தான் கிராமத்தில் இருந்து குமுழமுனை மகா வித்தியாலயத்திற்கு மாணவர்கள் சென்று வருவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. மாந்தை கிழக்கிலும் துணுக்காயிலும் பல பாடசாலைகள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாணவர்களுக்கான பேருந்து சேவைகள் நடத்த வேண்டும் என்ற தீர்மானங்கள் பல தடவைகள் எடுக்கப்பட்டும், இதுவரை பேருந்து சேவைகள் பல கிராமங்களுக்கு நடத்தப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



5ஆவது வருடத்தை நோக்கி நகரும்

# “நீதிக்கான ஏக்கம்”



ஜே.ஏ.ஜோர்ஜ்

*(திங்கட்கிழமை (19.02.2024) தொடர்ச்சி...)*

“அப்போது என் மகளுக்கு 13 வயது, இன்று இருந்திருந்தால் என் மகள் உயர்தரத்துக்கு தோற்றியிருப்பாள்” என்று தன் வேதனையை பெருமூச்சாக வெளிப்படுத்துகின்றார் தனது பெயரை குறிப்பிட விரும்பாத கனிஷ்கா நிரோஷியின் தந்தை.

கனிஷ்கா நிரோஷி தனது மற்றுமொரு சகோதரி மற்றும் தாயுடன் கட்டுவாப்பிட்டிய தேவாயலத்துக்கு சென்றிருந்த நிலையில், அங்கு குண்டு வெடிப்பில் சிக்கி தனது இன்னுயிரை இழந்தவர். சகோதரிக்குச் சிறியளவு பாதிப்பு ஏற்பட, தாய் பாரிய காயங்களுக்கு உள்ளாகி சுமார் ஒரு மாதத்துக்கும் அதிகமாக நீர்கொழும்பு வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று இப்போது குணமடைந்து வருகின்றார்.

“எனது மகள் உயிரிழந்தது என் மனைவிக்குத் தெரியாது. ஒரு மாதத்துக்குப் பின்னர் அவர் வீடு திரும்பியதும் கனிஷ்கா நிரோஷி எங்கே என்று கேட்டுக் கதறியதுடன், நள்ளிரவு வேளையில் கனிஷ்கா நிரோஷி அடக்கம் செய்யப்பட்ட கல்லறையைக் காட்டுமாறு கூறி அழுதார். அவர் கதறிய அந்த தருணங்களை என்னால் மறக்கவே முடியாது” - இது அந்த தந்தையின் வேதனை.

“எனது மற்ற மகளைப் பார்க்கும்போது, உயிரிழந்த கனிஷ்கா நிரோஷி எனது நினைவுக்கு வருவதை என்னால் தடுக்கமுடிவதில்லை” என்று சொல்லியபடியே தனது வீட்டில் வரவேற்பு அறையில் வைக்கப்பட்டுள்ள கனிஷ்கா நிரோஷியின் புகைப்படத்தைப் பார்த்துக் கண் கலங்கினார் அந்த 53 வயதான தந்தை.

“இந்த சம்பவத்தில் மகளை இழந்த பின்னர் என்னால் தேவாலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் பங்கு பற்ற முடியவில்லை. எனது மகளுக்கும் உயிரிழந்த மற்ற மக்களுக்கும் என்று நீதி கிடைக்கின்றதோ அன்றுதான் நான் மீண்டும் தேவாலயத்துக்குச் செல்வேன்” என தீர்மானமாக்கக் குரலில் கூறிவிட்டு எழுந்து சென்றார் கனிஷ்கா நிரோஷியின் தந்தை.

இதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தியான நிலையே காணப்படுகின்றது என்பதை மாற்றுக்கொள்கைகளுக்கான மய்யம் கடந்த வருட இறுதியில் நடத்தியுள்ள ஆய்வொன்று சுட்டிக்காட்டுகின்றது.

முஸ்லிம்கள் எப்படி உணர்ந்தார்கள் இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புக்குப் பின்னர், அதன் விளைவுகள் சமூகத்தின் கட்டமைப்புக்குள் ஆழமாக எதிரொலிக்க ஆரம்பித்துவிட்டது.

தனி நபர்கள் மற்றும் வணிகங்களில் ஒரே மாதிரியாக நீடித்த வடுக்களை இந்த சம்பவம் ஏற்படுத்தி விட்டது. முகமது சிஃபான் என்ற கடை உரிமையாளருக்கு, இந்த வீழ்ச்சி அப்பட்டமாகத் தெரிகின்றது. குண்டு வெடிப்புக்குப் பின்னர் அவரது 90 சதவீதமான சிங்கள வாடிக்கையாளர்கள் அவரது வியாபாரத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்திவிட்டனர், இது அவரது வியாபாரத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் நூறாயிரக்கணக்கான ரூபாய் அளவான நிதி இழப்புக்கு வழிவகுத்தது.

பொருளாதார மாற்றங்களுக்கு அப்பால், தாக்குதல்கள் தற்போதுள்ள சமூக பதட்டங்களை அதிகப்படுத்தியது, குறிப்பாக முஸ்லிம் சமூகங்களைக் குறிவைத்திருந்தது. பாத்திமா நுஸ்ரா என்ற முஸ்லிம் பெண் இதில் பாதிக்கப்பட்டவர்களின் ஒருவர். குண்டு வெடிப்புகளுக்குப்பிறகு, பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொது இடங்களில் முகத்தை மூடுவதற்கு அரசாங்கம் தடை விதித்தது, பாரம்பரிய இஸ்லாமிய உடைகளை அணிந்த முஸ்லீம் பெண்கள் அதிக சோதனை மற்றும் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்பட்டனர். அடக்கமான முக்காடு அணிந்தவர்கள் கூட துன்புறுத்தலையும் ஒதுக்கி வைப்பதையும் எதிர்கொண்டனர், தனி நபர்கள் தங்கள் மத நம்பிக்கைகளுக்கு முரணான ஆடைக் குறியீடுகளுக்கு இணங்கா விட்டால் அரசாங்க அலுவலகங்களுக்குள் நுழைய மறுக்கப்பட்டனர்.

இந்த பாகுபாடு பணியிடங்களுக்கு அப்பால் பொது இடங்களுக்கு விரிவடைந்தது, அங்கு மொஹமட் போன்ற நபர்கள் தனிப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்களை எதிர்கொண்டனர். மொஹமட் தனது தாடியைக் கத்தரித்து, பொது இடங்களில் அலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்து வந்த மோசமான நாட்களை நினைவுபடுத்தினார்.

தோளில் பையொன்றை எடுத்துச் செல்லுவதற்குப் பலரும் அச்சமடைந்திருந்த காலம் அது. சாதாரணமாகச் செயற்பாடுகள் சில காலங்களாகப் பயத்தால் நிறைந்திருந்தன. மொஹமட் போன்ற நபர்கள் பலமாதங்களாக தமது பழக்க வழக்கங்களைத் தவிர்க்க நேர்ந்ததுடன், தாக்குதல்களுக்குப் பிறகான பாதிப்பு இன்றும் அவர்களில் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பானது உடல் மற்றும் உயிர் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் பிரிவினை மற்றும் அவநம்பிக்கையின் விதைகளை சமூகத்தில் விதைத்தது. அத்துடன், இலங்கையின் சமூக-பொருளாதார நிலப்பரப்பில் மாறாத வடுக்களை ஏற்படுத்தியது.

இந்த சோகத்தின் பின் விளைவுகளை நாடு எதிர்கொண்டுள்ள நிலையில், மத மற்றும் இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட மற்றும் பரஸ்பர மரியாதையின் சூழலை வளர்ப்பதன் மூலம், பாகுபாடு மற்றும் சகிப்புத்தன்மை இன்மையை தூண்டும் அடிப்படை காரணிகளுக்குத் தீர்வு காணவேண்டியது அவசியமாகும்.

புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஊக்குவிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலமே இலங்கை இந்த அழிவுகரமான நிகழ்வினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றி, ஐக்கிய தேசமாக வலுவாக வெளிப்பட முடியும்.

(முற்றும்)





# விமான பயணத்தில் உயிர் தப்பிய ராஷ்மிகா

நடிகை ராஷ்மிகா மந்தனா அண்மையில் பயணம் செய்த விமானத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகவும் அதில் இருந்து தான் உயிர் பிழைத்தாக சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ் தெலுங்கு மற்றும் இந்தி படங்களில் நடித்து வரும் ராஷ்மிகா மந்தனா தற்போது பிஸியான நடிகையாக உள்ளார்.


இந்த நிலையில், அண்மையில் மும்பையில் இருந்து ஹைதராபாத்துக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்தபோது, திடீரென விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

அப்போது விமானி மிகவும் சாதுரியமாக செயல்பட்டு மீண்டும் மும்பைக்கு விமானத்தை திருப்பி அவசர அவசரமாக தரையிறக்கியதாகவும், அதனால் பெரும் விபத்து தடுக்கப்பட்டதாகவும் பயணிகள் அனைவரும் காயம் இன்றி உயிர் தப்பியதாகவும் ராஷ்மிகா மந்தனா தெரிவித்துள்ளார்.

மேலும், விமானம் அவசரமாக தரையிறங்கியபோது, ஆசனத்தின் மீது காலை வைத்தபடி தானும் நடிகை ஷ்ரத்தாவும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினோம் என்றும் புகைப்படத்தை பதிவு செய்துள்ளார்.



# சன்னி லியோனுக்கு பரீட்சை



பிரபல இந்தி நடிகை சன்னி லியோனுக்கு பொலிஸ் பரீட்சை எழுத உத்தரப் பிரதேச மாநில அரசாங்கம் பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி உள்ளதாக வெளியான தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் விரைவில் பொலிஸ் பணிக்கான பரீட்சை நடைபெறவுள்ள நிலையில், பரீட்சை அனுமதி அட்டை அனுப்பும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து, மர்ம நபர் ஒருவர் சன்னி லியோன் பெயரில் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்திருந்துள்ளார். அதை சரியாக சரி பார்க்காமல் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், அவருக்கு தற்போது புகைப்படத்துடன் கூடிய பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தப் பரீட்சை அனுமதி அட்டை தொடர்பான புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இந்த நிலையில், சன்னி லியோன் பெயரில் போலியாக விண்ணப்பம் செய்த மர்ம நபரை கண்டுபிடிக்க உத்தரப்பிரதேச மாநில பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஷங்கர் மகளுக்கு 2ஆவது திருமணம்





இயக்குநர் ஷங்கர் மகள் ஐஸ்வர்யாவுக்கு கடந்த 2022ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. எனினும், ஆறு மாதங்கள் கூட கணவருடன் அவர் வாழவில்லை என்றும் விவாகரத்து பெற்று பிரிந்து விட்டதாகவும் செய்தி வெளியானது.

இந்த நிலையில், ஷங்கர் மகள் ஐஸ்வர்யாவுக்கு இரண்டாவது திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளது என்று அவரது சகோதரி அதிதி ஷங்கர் தனது சமூக வலைத்தளத்தில் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

ஐஸ்வர்யாவுக்கு கணவராக வரப் போகிறவர் உதவி இயக்குநரான தருண் கார்த்திகேயன் என்பது குறிப்பிடத்தக்கது. திருமண நாள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஷங்கர் மகளின் முதல் கணவர் ரோஹித் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாகவும் அதன்பின் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்ததால் ஐஸ்வர்யா தனது கணவரை பிரிந்தார் என்று கூறப்படுகின்றது.

# ஆழ்ந்த தியானத்தில் அமலா பால்

சில மாதங்களுக்கு முன்னால் ஜெகத் தேசாய் என்பவரை திருமணம் செய்து கொண்ட நடிகை அமலா பால் கடந்த, தற்போது கர்ப்பமாக உள்ளார்.

இந்த நிலையில், கோவையில் உள்ள ஈஷா தியான மையத்திற்கு கணவருடன் சென்ற அமலா பால், அங்கேயே சில நாட்கள் தங்கி இருந்து சில புகைப் படங்களையும் வீடியோக்களையும் பதிவு செய்து வருகிறார்.

கணவர் மயிலுடன் இருக்கும் வீடியோ மற்றும் மாடுகளுக்கு இடையே அமலா பால் தியானம் செய்யும் புகைப்படம், வீடியோக்களும் இணையத்தில் வைரலாகி



வருகிறது. கர்ப்பமான நேரத்தில் அமலா பால் இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் மிகவும் அமைதியாகவும், மன நிம்மதியாகவும் இருப்பதை அடுத்து அவருக்கு ரசிகர்கள் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.



# அதிகாலை 3 மணிக்கு அழைப்பு வரும்

சினிமாவில் அட்ஜஸ்ட்மென்ட் குறித்து பல ஆண்டுகளாக குற்றச்சாட்டு இருந்து வரும் நிலையில், கமல்ஹாசன் நடிப்பில் உருவான ‘தசாவதாரம்’ படத்தில் நடித்த நடிகை மல்லிகா ஷெராவத் அண்மையில் பேட்டி அளித்துள்ளார்.

அதில், ஹீரோக்களை அட்ஜெஸ்ட் செய்யவில்லை என்றால் உடனே படத்திலிருந்து தூக்கி விடுவார்கள் என்றும் குறிப்பாக ஒரு ஹீரோ நள்ளிரவு 3 மணிக்கு தன்னை அவருடைய வீட்டுக்கு அழைத்தாலும் தான் போக வேண்டும், இல்லையென்றால் அடுத்த நாளே தான் அந்த படத்திலிருந்து நீக்கப்பட்டு விடுவேன் என்றும் தெரிவித்துள்ளார்.

தான் ஹீரோக்களுடன் சமரசம் செய்யவில்லை என்பதால் தனக்கு நிறைய படங்கள் கைவிட்டு போனது என்றும் எனக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்த 65 படங்களில் தான் ஹீரோக்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பதால் நான் நீக்கப்பட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் தன்னை நள்ளிரவில் அழைத்த ஹீரோ யார் என்பதை அவர் வெளியில் சொல்லவில்லை.

இஸ்ரேல்

# “போர் நிறுத்த பேச்சுவார்த்தை இல்லை”



பலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்க, இஸ்ரேல் நடத்தி வரும் போர், 4 மாதங்களுக்கும் மேலாக தொடர்கிறது.

இஸ்ரேல் தாக்குதலில் சுமார் 28,000 பேருக்கும் மேல் உயிரிழந்துள்ளதாக பலஸ்தீன சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதற்கிடையே, ஹமாஸ் அமைப்பினர் வசம் மீதம் உள்ள இஸ்ரேலிய பிணைக்கைதிகளை மீட்கவும், மீண்டும் போரை நிறுத்தவும் எகிப்து மற்றும் கத்தார் நாடுகளின் தலையீட்டில், இஸ்ரேல் - ஹமாஸுக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் ஹமாஸ் அமைப்பினர், நிரந்தர போர் நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இவற்றை ஏற்க இஸ்ரேல் மறுத்து விட்டது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினருடன் பேச்சுவார்த்தை குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கருத்து தெரிவித்தார்.

அதில், “ஹமாஸ் அமைப்பினரிடமிருந்து ஏமாற்றும் கோரிக்கைகளை தவிர வேறு எதுவும் வரவில்லை. அவர்களின் கோரிக்கைகளை ஏற்க முடியாது. மேற்கொண்டு போர்நிறுத்த பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் செல்லாது. பலஸ்தீனியர்களுக்கு தனிநாடு அந்தஸ்து தொடர்பான சர்வதேச ஆணைகளுக்கு இஸேரல் அடிபணியாது. பலஸ்தீனத்தை ஒருதலைபட்சமாக அங்கீகரிப்பதை எனது தலைமையிலான இஸ்ரேல் தொடர்ந்து கடுமையாக எதிர்க்கும். முன் நிபந்தனைகள் இல்லாமல் இரு தரப்புக்கும் இடையே நேரடி பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே ஒரு பயனுள்ள ஏற்பாட்டை செய்ய முடியும்.” என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# டிப்ஸாக இவ்வளவு தொகையா?




அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள உணவகம் ஒன்றில் மார்க் என்பவர் இரவு உணவு உட்கொள்ள சென்றுள்ளார். உணவு மற்றும் தண்ணீர் போத்தல் ஓர்டர் செய்துள்ளார்.

உணவு உட்கொண்ட பின்னர் பெரும்தொகையை டிப்ஸ் ஆக வழங்க முடிவு செய்துள்ளார். அந்த வகையில், ஊழியர் ‘பில்’ கொடுத்துள்ளார். அதில், டிப்ஸ் ஆக பெரும்தொகையை வைத்துள்ளார்.

அந்த பெரும்தொகை ஊழியர்களை ஆச்சர்யத்தில் மூழ்கடித்துள்ளது. அந்த நபர் 32.43 அமெரிக்க டொலர் மதிப்புக்கு (இலங்கை மதிப்பில் 10,150 ரூபாய்) உட்கொண்டுள்ளார். ஆனால், டிப்ஸாக 10 ஆயிரம் அமெரிக்க டொலர் வழக்கமாக 15 முதல் 25 சதவீதம் வரை டிப்ஸ் பெறுவோம். ஆனால், இந்த நன்றியுணவர்வுக்கு அளவே இல்லை என ஊழியர்கள் நெகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

ரெஸ்டாரன்ட் உரிமையாளர், அப்போது வேலையில் இருந்த 9 பேருக்கு அந்த தொகையை பிரித்து கொடுத்துள்ளார்.

இதற்கிடையே டிப்ஸ் கொடுத்த மார்க் தனது இஸ்டாகிராம் பக்கத்தில் இந்த டிப்ஸ் வழங்கிய பில்லை போஸ்ட் செய்து “நான் அழுகிறேன், நீ அழுகிறாய், நாம் அனைவரும் அழுகிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

“இவ்வளவு தொகையை டிப்ஸ் கொடுப்பதாக எழுதியுள்ளீர்கள். தவறாக எழுதி விட்டீர்களா?” என ரெஸ்டாரன்ட் மானேஜர் மார்க்கிடம் கேட்டுள்ளார்.

அதற்கு அவர் “இல்லை. நான் தெரிந்துதான் எழுதியுள்ளேன். எனது நண்பர் சமீபத்தில் இறந்து விட்டார். அவரது இறுதிச் சடங்கு இந்த நகரில்தான் நடந்தது. இது அவரது நினைவாக” என்று தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

# சிசேரியன் மூலமாக பிறந்த

‘குட்டி’ கொரில்லா

அமெரிக்காவின் டெக்ஸாஸில் உள்ள ஃபோர்ட் வொர்த் உயிரியல் பூங்காவில் (Fort Worth Zoo) கர்ப்பமாக இருந்த செகானி என்ற கொரில்லாவிற்கு சிசேரியன் மூலமாக குட்டி கொரில்லா பிறந்துள்ளது.

‘பிரீக்ளம்ப்சியா’ என்பது கர்ப்ப காலத்தின்போது ஏற்படும் தீவிர இரத்த அழுத்த நிலையால் ‘செகானி’ என்ற கொரில்லா பாதிக்கப்பட்டிருந்தால் தாய் மற்றும் குழந்தையின் உயிரை காப்பாற்ற அறுவை சிகிச்சை அவசியம் என மருத்துவர்கள் முடிவெடுத்தனர். அதனைத் தொடர்ந்து நடந்த அறுவை சிகிச்சையில் இந்த குட்டி கொரில்லா பிறந்தது.

நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு முன்னதாக பிறந்த இந்த கொரில்லாவுக்கு ‘ஜமீலா’ என பெயர் வைத்துள்ளனர். தற்போது ‘செகானி’ மற்றும் ‘ஜமீலா’ ஆரோக்கியத்துடன் இருப்பதாக ‘ஃபோர்ட் வொர்த்’ உயிரியல் பூங்கா தெரிவித்துள்ளது.

சென்னை

# “மீனவர்கள் கைது தொடர்பில் தலையிட வேண்டும்”

தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில், பிரதமர் மோடி இராஜதந்திர ரீதியாகத் தலையிட வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்வதைக் கண்டித்தும், படகுகளை இலங்கை அரசு நாட்டுடைமையாக்குவதைக் கண்டித்தும் இராமேஸ்வரத்தில் படகுகளில் கறுப்புக் கொடியைக் கட்டி 700க்கும் மேற்பட்ட மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த செய்தியை மேற்கொள் காட்டி எக்ஸ் சமூகவலைத்தளத்தில் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், “தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில், பிரதமர் மோடி ராஜதந்திர ரீதியாகத் தலையிட வேண்டும். 3 மீனவர்கள் அநியாயமாக நீண்ட காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில், 69 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். படகுகள் இலங்கை அரசால் தேசிய மயமாக்கப் பட்டுள்ளது.



தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்வது கவலை அளிக்கிறது. தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படுவதை பிரதமர் மோடி, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி செய்ய வேண்டும். மீனவர்களின் நலனை பாதுகாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுப்பது முக்கியம். ஏனென்றால் அவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல, பெருமைமிக்க இந்தியர்கள்” என அந்த அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.


கொல்கத்தா

# “அக்பர் – சீதா ஒரே இடத்தில் இருக்க கூடாது”

திரிபுரா மாநிலத்தில் உள்ள செபாஜிலா உயிரியல் பூங்காவில் இருந்து மேற்கு வங்காளத்தில் உள்ள சிலிகுரி சபாரி உயிரியல் பூங்காவிற்கு கடந்த 12ஆம் திகதி 2 சிங்கங்கள் கொண்டு வரப்பட்டன. அதில் உள்ள 7 வயதுள்ள ஆண் சிங்கத்திற்கு அக்பர் என்றும் 6 வயதுள்ள பெண் சிங்கத்திற்கு சீதா என்றும் முன்னரே பெயர் வைத்துள்ளனர்.

‘சீதா’ மற்றும் ‘அக்பர்’ சிங்கத்தை ஒரே இடத்தில் அடைப்பது இந்து மதத்தை அவமதிக்கும் விடயம் என விஷ்வ இந்து பரிஷத் கொல்கத்தா உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளது.

அக்பர் என்பது புகழ்பெற்ற முகலாய மன்னரின் பெயராகும். இராமாயணத்தில் ராமனின் மனைவி பெயர் சீதா என்பது குறிப்பிடத்தக்கது.






## ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்

# வி.எஃப்.எல் போச்சுமிடம் தோற்ற பயேர்ண் மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், வி.எஃப்.எல் போச்சுமின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் தோற்றது.






மியூனிச் சார்பாக, ஜமால் முசியாலா, ஹரி கேன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். போச்சும் சார்பாக தகுமா அஸானோ, கெவென் ஸ்கொல்லெட்டர்பெக், கெவின் ஸ்டொகர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 58 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பயேர் லெவர்குசன் உள்ளது. 50 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மியூனிச்சும், 46 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் வி.எஃப்.பி ஸ்டட்கார்ட்டும், 41 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் பொரூசியா டொட்டமுண்டும் உள்ளன.

## இத்தாலிய சீரி ஏ தொடர்

# மொன்ஸாவிடம் தோற்ற நடப்புச் சம்பியன்கள்



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மொன்ஸாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் தோற்றது. மிலன் சார்பாக, ஒலிவியர் ஜிரூட், கிறிஸ்டியன் புலிசிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மொன்ஸா சார்பாக மட்டியோ பெஸினா, டனி மோட்டா, வரென் பொன்டோ, லொரென்ஸோ கொலொம்போ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பொலொக்னாவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லேஸியோ தோற்றது. சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் இன்டர் மிலனும், 54 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஜூவென்டஸும், 52 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஏ.சி மிலனும் உள்ளன.

# சிற்றி செல்லும் மப்பே?



பிரெஞ்சு லீக் கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பேயின் பிரதிநிதிகள், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர்.

பருவகால முடிவில் தனது ஒப்பந்தம் காலாவதியாகும்போது கழகத்திலிருந்து வெளியேறுவதை பரிஸ் ஸா ஜெர்மைனுக்கு அறிவித்துள்ள 24 வயதான மப்பே, பெரும்பாலும் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டிலேயே இணைவாரென எதிர்பார்க்கப்படுகையிலேயே குறித்த தகவல் வெளியாகியுள்ளது.



## இங்கிலாந்துக்கெதிரான நான்காவது டெஸ்டில்

# ஜஸ்பிரிட் பும்ராவுக்கு ஓய்வு

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரின் மூன்றாவது டெஸ்டில் இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ராவுக்கு ஓய்வளிக்கப்படவிருந்த நிலையில் தற்போது நான்காவது டெஸ்டில் ஓய்வளிக்கப்படுமெனத் தெரிகிறது.

இந்நிலையில், ஐந்தாவது போட்டியில் பும்ரா விளையாடுவது குறித்து பின்னர் முடிவெடுக்கப்படவுள்ளதுடன், நான்காவது போட்டியின் முடிவிலும் அம்முடிவு தங்கியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 20, பெப்ரவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.